EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I    Issue- 1    January - 2022

# அத்தியாயம் - 58

# முப்பெரும் அறநூல்களுள் கல்வி, நட்பு பற்றிய செய்திகள்

*இரா. ஹேமலதா*
*தமிழ்த்துறை*
*ஜி.டி.என்.கலைக் கல்லூரி, திண்டுக்கல்.*

## *முன்னுரை*

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான நாலடியாரும், திருக்குறளும் மனித வாழ்க்கையில் ஏற்படும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் விடைத்தரக் கூடிய அரிய நூல்களாக திகழ்கின்றன என்பதை

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என மகாகவி பாரதியார் பாடியது போல உலகப் புகழ் பெற்று எக்காலத்திற்கும் ஏற்ற அரிய பலக் கருத்துக்களை கொண்ட வாழ்வியல் இலக்கிய நூல்களாக இன்றளவும் திகழ்கின்றன. இவ்விரு நூல்களிலும் இடம் பெற்றுள்ள கல்வி, நட்பு என்ற அதிகாரங்களின் கருத்துக்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கல்வி கற்றவர்களின் சிறப்பு

முப்பெரும் அறநூல்களாக திகழ்கின்ற திருக்குறளும், நாலடியாரும், கல்வியின் சிறப்பையும், மனதில் மண்டி கிடக்கும் அறியாமையை போக்கும்

மருந்தாக கல்வி செயல்படுவதை பாடல்களின் வழி மிக அழகாக எடுத்துக்காட்டி உள்ளன.

ஒருவன் ஓர் பிறவியில் கற்ற கல்வியானது அப்பிறப்பு மட்டுமின்றி ஏழு பிறப்பிலும் உதவும் என்பதை,

'ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
ஏழுமையும் ஏமாப் புடைத்து"

- திருக்குறள் - 398

திருக்குறளின் வழி அறியலாம்.

கல்வி இவ்வுலக இன்பத்தை நம் வாழ்நாள் முழுதும் கற்றவர்களுக்கு வழங்கி கொண்டே இருக்கும். பிறருக்கு கற்று தருவதால் குறையாது. கற்றவர் புகழை எங்கும் பரவ செய்வதோடு மட்டுமின்றி நாம் உயிரோடு இருக்கும் வரை அழியாது என்றும் ஆகையால் எந்த உலகத்திலும் கல்வியைப் போல அறியாமையைப் போக்கும் மருந்தை இதுவரை யாரும் கண்டதில்லை.

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாம்காணோம் கல்வி போல்
மம்மர் அருக்கும் மருந்து"

- (நாலடியார் - 130)

என்பதை நாலடியார் பாடலின் மீது அறியலாம்.

கல்வியறிவு இல்லாதவர்கள் உயர்குடியில் பிறந்திருந்தாலும் தாழ்ந்த குடியில் பிறந்த கல்வியறிவு பெற்றவர்களுக்கு சமமாக மாட்டார்கள் என்பதை (திருக்குறள் - 409) பாடலின் வழி அறியலாம். திருக்குறளில் கூறப்பட்டதை போலவே நாலடியாரிலும் படகை செலுத்துபவனைப் பழமையான கீழ்ச்சாதிகளில் மேல்சாதியைச் சார்ந்தவன் என இகழமாட்டார்கள் மேலோர் அப்படகை செலுத்துபவனின் துணை கொண்டு ஆற்றைக் கடப்பது போல நல்ல சாத்திரங்களைக் கற்றுணர்ந்தவர் எக்குடியைச் சார்;ந்தவராய் இருப்பினும் அவர்களின் துணை கொண்டு நூலின் பொருளை கற்றறிய வேண்டும். உயிரோடு இருந்தாலும் கல்வியறிவு இல்லாத மானிடர்களை உவர் நிலத்திற்கு சான்றாக கூறுவர் என்பதை நாலடியாரின் பாடல்களால் அறியலாம்.

## நட்பின் பெருமை

கற்றறிந்த வல்லுநர்களுடன் நாம் கொண்ட நட்பு கரும்பை அடியிலிருந்து நுனியை நோக்கி தின்பது போல வரவர இனிமை தரக் கூடியது.

ஆனால் கல்லாதவருடன் கொண்ட நட்பானது எதிர் செலத் தின்பதை போல நாளடைவில் சுவை குறைந்து வெறுக்கப்படும் என்பதை

' கருத்துணர்ந்து கற்றறிந்தார்
கேண்மை எஞ்ஞான்றும்"

- நாலடியார் - 211

நல்லோருடன் கொண்ட நட்பு வளர்பிறைத் தங்கள் போன்ற தன்மையுடையது அறிவில்லாதவருடன் கொண்ட நட்பு தேய்பிறை நிலவு போன்று நாளுக்கு நாள் குறையும் தன்மை கொண்டது என்பதை திருக்குறளின் மூலம் உணரலாம்.

'யானை யானையவர் நன்பொரிஇ நாயனையர்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்"

- (நாலடியார் - 213)

யானை போன்ற பெருமையுடையாரின் நட்பை விலக்கி நாய் போன்ற இழிவுத் தன்மை உடையராயினும் அவரது நட்பை விரும்பிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் யானை பலநாள் பழகியிருந்தும் சமயம் வாய்க்கும் போது பாகனையே கொல்லும் ஆனால் நாயோ தன்னை வளர்த்தவன் சினம் கொண்டு தன்னை தாக்கினாலும் அவரைக் கண்டதும் வாலை ஆட்டி கொண்டே அவர் அருகே செல்லும் அகன்ற கல்வியும், சிறந்த குடியும் இல்லையென்றால் மனம் தூய்மை உடையவராய் இருந்தால் அவருடன் நட்பு கொள்ளலாம் ஆனால் திருக்குறளிலோ

' நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

படிக்கும் போதெல்லாம் மகிழ்ச்சியை தரும் நூலின் இன்பும் போல நல்ல குணமுள்ளவரோடு கொண்ட நட்பு அவரோடு பழகும் போவெதல்லாம் மகிழ்ச்சியை தந்து கொண்டே இருக்கும்.

கவியரசு என்றழைக்கப்படுகின்ற கவிஞர் கண்ணதாசன் தன்னுடைய 'நட்பு" எனும் கவிதையில் நண்பர்களை மூன்று வகையாகப் பாகுபடுத்தியுள்ளார். பனை, தென்னை, வாழை என்று இதில் பனை மரம் போன்ற குணமுடையவருடன் நாம் நட்பு கொள்ள வேண்டுமென கூறியுள்ளார்.

# தொகுப்புரை

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய முப்பெரும் 'அறநூல்களான திருக்குறளிலும், நாலடியாரிலும் இடம் பெற்றுள்ள கல்வி, நட்பு போன்ற

அதிகாரங்களின் மூலம் கல்வியின் முக்கியவத்துவம், கற்றவருடன் கொண்ட நட்பு குறித்து இக்கட்டுரையின் வாயிலாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## பார்வை நூல்கள்

1. உலகம் போற்றும் திருக்குறள், லியோ பதிப்பகம், சென்னை.
2. நாலடியார் நயவுரை ' புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், புதுச்சேரி.